[1984 மார்ச் 29

(முற்பகல் 9-50)

எல். எண்டத்தூர் கிராமத்தில் கட்டப்படும் கால்நடை மருத்துவ மனைக் கட்டிடம்.

508 – (*வினா எண் 20489) — திரு. சி. கணேசன் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அச்சிறுபாக்கம் தொகுதி எல். எண்டத்தூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனைக் கட்டிடம் முடிவுபெறாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : அச்சிறுபாக்கம் தொகுதி எல். எண்டத்தூர் கிராமத்தில் கால்நடை மருத்துவ மனை கட்டிடம் முடிவு பெறாமல் இருப்பதை அரசு அறியும்.

எல். எண்டத்தூர் கால்நடை மருத்துவமனைக் கட்டிட வேலைகள் அச்சிறுபாக்கம் ஊராட்சி ஒன்றிய ஆணையரால் கட்டிட ஒப்பந்தக்காரர் மூலம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. சரியான ஒப்பந்தக்காரர் அமையாததாலும், பழைய விகிதத்திற்கே (Rate) செய்ய வேண்டியிருப்பதாலும் காலதாமதப்பட்டு வந்தது எனவும் தற்போது மேற்படி வேலையை துரிதமாக முடிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அச்சிறுபாக்கம் ஊராட்சி ஒன்றிய ஆணையர் தெரிவித்துள்ளார்.

திரு. சி. கணேசன் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் எல். எண்டத்தூர் கால்நடை மருத்துவ மனை கட்டுவது காலதாமதம் ஆகிறது என்று சொன்னார்கள். ஆண்டுக்கணக்கில் அந்தப் பணி முடிவுறாமல் இருக்கிறது. அதற்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதோடு மட்டுமல்லாமல், கால்நடைகளின் சுகாதாரத்தைக் கருதி அந்த மருத்துவமனை அத்தியாவசியமானது என்று கருதி அது ஆரம்பிக்கப்பட்டதால், அதை உடனடியாகக் கட்டி முடிக்க வேண்டும் என்று அவசர உத்தரவு பிறப்பிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பேரவைத் தலைவர் அவர்களே, அது கட்டி முடிக்கப்படாமல் இருப்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. அச்சிறுபாக்கம் தொகுதி எல். எண்டத்தூர் கிராமத்தில் கால்நடை மருத்துவ மனைக் கட்டிடம் கட்டுவதற்காக சர்வே எண். 44/2-ல் 2.86 ஏக்கா நிலம் ஒதுக்கப்பட்டு, 1973-74-ல் அதற்காக நிதி ஒதுக்கப்

பட்டது. அந்தப் பணியும் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் எல். எண்டத்தூரில் உள்ள உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்த காரணத்தால், அந்தக் கட்டிட வேலைகள் பூர்த்தி செய்யப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டது. பின்னர் அரசு உத்தரவின் பேரில் 1 ஏக்கர் நிலம் எல். எண்டத்தூர் கால்நடை மருத்துவ மனைக்காக ஒதுக்கக்கப்பட்டது. கட்டிடம் கட்டுவதற்காக அடித்தளப் பணிகள் முடிக்கப்பட்டது. திரும்பவும் எல். எண்டத்தூர் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் எதிர்ப்பு தெரிவித்த காரணத்தால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அதற்காக தேவையான நடவடிக்கை எடுத்து. மறுபடியும் அந்த மருத்துவ மனைக்காக 25 சென்ட் நிலம் ஒதுக்கப்பட்டது. மருத்துவ மனை கட்டுவதற்கு 25 சென்ட் நிலம் போதுமானதாக இல்லை. அதற்காக ஒரு ஏக்கர் நிலம் கண்டிப்பாக வேண்டும். இதன் காரணமாகத்தான் அங்கே கட்டிட வேலைகள் கட்டப்படாமல் நிறுத்தி வைக்கப் பட்டன.

மேலும், பல வேலைகள அப்படியே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. கதவுகள், ஜன்னல்கள், பொருத்துவது போன்ற வேலைகள் நடைபெறவில்லை. அறுவை சிகிச்சைக் கூடம், சுவருக்கு சிமெண்ட் பூசும் வேலை, மற்றும் பல வேலைகள் நடைபெறாமல் இருக்கிறது. நிர்வாக காரணங்களாலும் வேலைகள் நடைபெறாமல் இருக்கின்றன. ஒப்பந்தக்காரர்களும் வேலையை முடிக்காமல் நிறுத்தி வைத்திருக்கின்றனர். அந்த வேலை துரிதமாக செய்ய வேண்டும் என்றும், அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் ஒப்பந்தக்காரர்களிடம் மறுபடியும் தெரிவித்துள்ளதாக, அந்த ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள்.

மேலூரில் இயங்கி வரும் கால்நடை மருந்தகத்தை மருத்துவ மனையாக்கும் திட்டம்.

509 —(*வினா எண். 21455) திரு க. வெ. விரானம்பலம் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி மேலூரில் தற்போது இயங்கிவரும் கால்நடை மருந்தகத்தைக் கால்நடை மருத்துவ மனையாக்க (Hospital) அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும் ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) மற்றும் (ஆ) மேலூருக்கு அருகாமையில் தல்லாகுளம், பள்ளப்பட்டி மற்றும் நிலக்கோட்டை ஆகிய இடங்களில் கால்நடை மருத்துவ மனைகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS